2013 மே 9]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: என்னுடைய மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்வார்கள். அது அறிவிப்போடு நின்றுவிடும்; கல்லூரி அமைத்துத் தர மாட்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டுதான் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். அறிவிப்பு செய்த அதே ஆண்டில், அந்த நேரத்திற்கு போதும் என்கின்ற அளவிலே, இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கி, அதுமட்டுமல்ல; 117 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உடனடியாக கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 449, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

449—

மாணவியர் விடுதி

***17664—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மே 9

(அ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய ஆதி திராவிடர் நலத் துறை மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலையில் அரசு ஆதி திராவிடர் பள்ளி மாணவியர் விடுதி 2012-2013 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணை பெற்று பள்ளி மாணவியர் விடுதி தொடங்கப்பட்டு, தற்போது மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகங்கள் ஒன்றுதிரண்டு வான்மழை பொழிந்து எப்படி பூமியை குளிர்விக்கிறதோ, அதுபோல 110 என்ற வான்மழை! அம்மா அவர்களின் அருள் மழை! (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலன் பேணும் அறிவிப்பு மழை! தினம் தினம் பொழிந்து, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் மனதையும் குளிர்வித்துக்கொண்டிருக்கிறது. அப்படி மக்கள் மனதைக் குளிர்வித்து நல்லாட்சி நடத்தும் அம்மா அவர்களை வணங்குகிறேன், இந்தக் கேள்வியைக் கேட்டதற்குப் பின்னாலே, விடுதி திறக்கப்பட்டு, மாணவிகள் மிகச் சிறப்பாக அங்கே பயின்று வருகிறார்கள் என்பதையும் இந்த மன்றத்திலே பதிய வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன், வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

2013 மே 9]

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, நெய்வேலி நகரத்தில் ஜவஹர் அறிவியல் கலைக் கல்லூரி உள்ளது. அந்தக் கல்லூரியில் ஆதி திராவிடர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள அந்தப் பகுதியில் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் இடம் இருப்பின், நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று இந்த நிதியாண்டில் துவக்குவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் மாணவர் விடுதி மிகவும் பழுதடைந்து, மாணவர்கள் அங்கே தங்கிப் பயில்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்த விடுதிக்குப் பதிலாக ஒரு புதிய விடுதியைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 3 ஆம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் எங்கெல்லாம் பழுதடைந்த விடுதிகள் காணப்பட்டதோ, அந்த விடுதிகளை எல்லாம் பராமரிப்பதற்காக 1,059 விடுதிகளுக்கு 76.33 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது பழுதுகள் நீக்கப்பட்டு, விடுதிகள் அனைத்தும் புதுப் பொலிவுடன்

காட்சியளிக்கின்றன. இருப்பினும், மாமன்ற உறுப்பினர் கோரிய விடுதியை துறை அலுவலர்களைக்கொண்டு ஆய்வு செய்து, இவ்வாண்டில் அந்த விடுதியைப் பழுது நீக்கம் செய்யமுடியுமெனில் பழுது நீக்குவதற்கும், பழுது நீக்கம் செய்யமுடியாத அளவிற்கு முழுவதுமாக பாதிப்படைந்திருந்தால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று புதிய விடுதி கட்டித் தருவதற்கும் ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 450, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

450—

பேருந்து வசதி

***7693—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியிலுள்ள மலைப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, மலைவாழ் மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வாணியம்பாடியிலிருந்து ஜமுனாமரத்தூர் வழியாக பட்டரைக்காடு வரை சென்று வந்த 4 நடைகளில் 2-7-2011 முதல் 2 நடைகள் போளூருக்கு நீட்டித்து இயக்கப்பட்டு வருகின்றன. வாணியம்பாடியிலிருந்து காவலூர் மலைப் பகுதிக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. வாணியம்பாடியிலிருந்து காவலூர் மலைப் பகுதி மக்களினுடைய நலன் கருதி, கூடுதலாக 4 நடைகள் 17-9-2011 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வாணியம்பாடி தொகுதியில் புதிய